# இலங்கையின் உள்நாட்டு யுத்தத்துக்கு பின்னரான தமிழ் மக்களின் அரசியல் பங்குபற்றுதலின் போக்கு யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் ஒரு விடய ஆய்வு

தி. விக்னேஸ்வரன்[1*]

இலங்கையிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டமும் ஒன்றாகவுள்ளது. இலங்கையில் உள்நாட்டு யுத்தத்துக்கு பின்னரான தமிழ் மக்களது அரசியல் பங்குபற்றுதலின் போக்கு: யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் ஒரு விடய ஆய்வு என்பதனூடாக எழுமாற்று அடிப்படையில் தமிழ் மக்களது அரசியல் பங்குபற்றுதலின் போக்கிற்கான காரணங்கள் மற்றும் அரசியல் ரீதியிலான எதிர்பார்ப்புக்கள் போன்ற விடயங்களினை விமர்சன ரீதியாக ஆராய்வதாக இவ் ஆய்வு அமைகின்றது. இரண்டாம் நிலைத்தரவுகளினை அதிகளவு அடிப்படையாகக் கொண்டும் நேரடி அவதானிப்புக்கள், வாக்காளர்களுடனான கலந்துரையாடல்களினூடாக பெறப்பட்ட தரவுகளினை அடிப்படையாகக் கொண்டும் 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் நடைபெற்ற இரண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள், இரண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் மற்றும் வடமாகாணசபைத் தேர்தல் முடிவுகளினையும் கொண்டு விமர்சனப்பகுப்பாய்வு முறையினைப் பின்பற்றி இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு யுத்தத்துக்கு பின்னரான தமிழ் மக்களது அரசியல் பங்குபற்றுதலின் வளர்ச்சிப் போக்கானது இனப்பிரச்சனை தீர்வுவிவகாரத்தில் எவ்வகை தாக்கத்தினை செலுத்தவல்லது அதன் விளைவுகள் போன்றவற்றினை ஆராய்வதாக இவ் ஆய்வு உள்ளது. மேலும், தமிழ் மக்களது அரசியல் பங்குபற்றுதலின் போக்கில் உள்ள பலங்கள் பலவீனங்களினை ஆராய்ந்து தமிழ் மக்களது அரசியல் பிரச்சனையினை நிரந்தரமாகவும் நடைமுறைச்சாத்தியமானதுமான வகையில் தீர்வினை அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் தமிழ் மக்களின் அரசியல் பங்குபற்றுதலினை ஊக்குவிப்பதற்கான யோசனைகளினையும் பரிந்துரைகளினையும் இவ்ஆய்வு முன்வைப்பதாக உள்ளது. ஆய்வுப்பிரதேசத்திலுள்ள தமிழ் மக்களது அரசியல் பங்குபற்றுதல் என்பது பெருமளவு தேர்தல்களின் போது வாக்களிப்பதுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் இருந்து மக்களினை விடுவித்து முழு அளவிலான அரசியல் பங்குபற்றுதலில் மக்களினை ஈடுபடுத்துவதற்கான உபாயங்களினையும் ஆராய்கின்றது. 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் தமிழ் மக்களது தேர்தலில் வாக்களித்தல் அரசியல் பங்குபற்றுதலானது படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருவதனை 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் நடந்த ஐந்து ஜனாதிபதி மற்றும்

[1] அரசறிவியல்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
vigneswaran7@gmail.com

பாராளுமன்ற தேர்தலின் முடிவுகளினைக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம். எனவே ஆய்வு பிரதேசத்திலுள்ள மக்களது அரசியல் விழிப்புணர்வும் ஆர்வமும் வளர்ச்சி அடைந்து வருதலினால் இவ்வகை அரசியல் ரீதியிலான விழிப்புணர்வினையும் அரசியல் பங்குபற்றுதலினையும் தமிழ் மக்கள் தமது இனப்பிரச்சனைக்கான தீர்வுக்குரிய உந்துசக்தியாக எவ்வாறு மாற்றி அமைக்க முடியும் அதற்கான யோசனைகள் தந்திரோபாயங்கள் போன்றவற்றினை விமர்சனப் பகுப்பாய்வு முறையினூடாக முன்வைப்பதாக இவ் ஆய்வு உள்ளது.

*திறவுச்சொற்கள்: அரசியல் பங்குபற்றுதல், இனப்பிரச்சனை, தேர்தல் மாவட்டம்*